முருகப்பெருமான் துணை

# மகான் கூற்றுவ நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**01.05.2021**, சனிக்கிழமை

1. தரணியில் ஞானவான்கள் எனும்
தன்னார்வ தொண்டுமிக்க
தருமவான்களை உருவாக்கிட
தவசியாய் வந்த அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் யோகபிரசன்ன ஆசி
வரங்களென பிலவ தகர் திங்கள்
வளம்பெற மூவாறு திகதி காரி வாரம்
(பிலவ வருடம் சித்திரை மாதம் 18ம் நாள், 01.05.2021 சனிக்கிழமை)
3. வாரமதில் கூற்றுவ நாயனாரும்
வழங்குவேன் உலகநலம்பெற
அறமெனும் அரங்கன் சக்தி
அரணாக காத்து வருகவே
4. வருகவே அகிலத்தார் தானும்
வணங்கி பிரணவக் குடிலுக்கு
ஆறுமுகா அரங்கா எனவேண்டி
அனுகி ஞானத்திருவடி பற்ற
5. பற்றவே பற்றிய வினை ஓடும்
பாவமான பொறி புலன் வழி
பற்றிய குற்றங்களும் விலகி
பண்பான குணநலன் பெருகும்
6. பெருகுமே வாழ்வின் தத்துவம்
பெருந்தயவே எனும் சூட்சுமம்
முருகப் பெருமான் வழிபாடே எனும்
முழுமையான ஞானபலமும் கூடும்
7. கூடவே வாழுகின்ற காலமே
குடும்பம் அயலார் என யாவர்க்கும்
ஈடுபாடாய் தரும வழி காட்டி
இணையிலா ஞான வாழ்வு தரும்
8. தருகின்ற உயர் நிலையும்
தவசி அரங்கன் அருளும்
தருமபலமும் இணைவதாலே
தரணியோர் உலகப் பேரிடரையும்
9. பேரிடரையும் வெல்லும் சக்தியும்
பெருந்தயவாய் வாழும் கதியும்
பெருமைபட கூடி சிறப்பார்
பிரணவக் குடில் தொடர்பாலே

10. தொடர்பாலே வந்த நோக்கமும்
தெய்வ பலமுற மெய்ஞானமும்
இடரெனும் தொடர் பிறவியை
இனிதே களையும் சூட்சுமமும்

11. சூட்சுமமும் கிட்டி குருவருளால்
சுருதிபடி பிறவா பேற்றை
மாட்சிமைபட உலகோர் அடைவர்
மொழிந்திட்ட யோகபிரசன்ன ஆசி முற்றே

—சுபம்—